**தமிழ் மொழி மற்றும் இலக்கியத்தின் சமகாலத்தன்மை**
**மலர் 2, இதழ் 2, 2021**
**ராமச்சந்திர கல்வி மற்றும் விளையாட்டு அறக்கட்டளை பதிப்பகம்**
**பன்னாட்டுத் தரப்புத்தக எண் : 9788194845959**
**இணையதளம்: http://restpublisher.com/book-series/ctll/**

# சங்க இலக்கியங்கள் கூறும் வணிகத்தின் சிறப்பம்சம்

**ந.கனிமொழி**
செயின்ட் ஜோசப் மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி ஓசூர் - 635 126

**ஆய்வுச்சுருக்கம்**

“அருளில்லார்க்கு அவ்வுலகம் இல்லை யாகியாங்கு
பொருளில்லார்க்கு இவ்வுலகம் இல்லை”

என்ற குறளின் வரிகளுக்கேற்ப இவ்வுலகில் மனித வாழ்வு சிறப்பாக நடைப்பெற பொருள் அவசியம். ஆகவே, “திரைக்கடலோடியும் திரவியம் தேடு“ என்ற பழமொழிக்கேற்ப திரவியம் தேட மனிதன் ஆரம்பித்தான். ஒரு நாட்டின் வளர்ச்சியைத் தீர்மானம் செய்வது அந்நாட்டின் கண்களெனப் போற்றப்படும் தொழிகளான விவசாயம். மற்றொன்று விளைவித்த பொருளைச் சந்தைப்படுத்துவது. அதாவது வணிகம். அப்படிப்பட்ட இவ்வணிகமே ஒரு நாட்டைப் பொருளாதார அளவில் முன்னேற்றப்பாதைக்கு கொண்டுச் செல்லும். ஏனெனில் ஒரு நாட்டின் முன்னேற்றமே தனிமனித முன்னேற்றமாகும். ஆகவே இதற்கு காரணமாக இருக்கக் கூடிய வணிகம் தற்காலத்தில் மட்டுமல்ல சங்ககாலத்திலும் எவ்வாறு இருந்தது என்பதைக் குறித்து விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கம்.

## முன்னுரை

வாணிகம் செய்வார்க்கு வாணிகம் பேணிப்
பிறவும் தமபோற் செயின் (குறள்.120)

பிறர் பொருளையும் தன் பொருள் போல் எண்ணிக் கொடுக்கல் வாங்கல் செய்வதே சிறந்த வாணிபம் என்று திருக்குறள் கூறுகிறது. வணிகத்தின் மொழியாக ஆங்கிலம் திகழ்கிறது. பண்டைய தமிழகத்தின் பொருளாதாரம் உழைப்பை உயர்வாகக் கொண்டது. பொருளாதார வாழ்க்கை நிலைக்கேற்ப தொழில் செய்து. உழைத்து உற்பத்தியைப் பெருக்கினர். தன்னிறைவுடன் வாழ்ந்து, செல்வத்தைப் பெருக்கினர். வணின மூலங்கள் பெருகின அதன் மூலம் வணிகமும் பெருக்கெடுத்தது.

வணிகம் தொழிலுக்குக் கவர்ச்சியளித்தது. கைவினைஞர்களுக்குத் தொழில்வாய்ப்பும், வளமும் ஏற்படுத்தியது. உள்நாட்டு வணிகர்களும் வெளியிடத்து வணிகர்களும் தமிழகத்தில் தொழிலில் ஈடுப்பட்டிருந்தனர். மகத, யவன நாட்டினர், தமிழகத்துத் தொழில் பிரிவுகளில் ஈடுப்பட்டிருந்தனர் என்று நற்றிணை போன்ற இலக்கியங்கள் வாயிலாக அறியலாம்.

## வாணிகம்

உற்பத்தி, தேவைக்கு மிஞ்சும் போது பண்டத்தை மாற்றும் நிலை உருவாகின்றது. சங்க காலத்தில் தமிழ் மன்னர்கள் நாணயம் அச்சிட்டிருப்பதையும்,

பதிப்புரிமை: ராமச்சந்திர கல்வி மற்றும் விளையாட்டு அறக்கட்டளை பதிப்பகம்

வெளிநாட்டு வணிகர்கள் அவர்களுடைய நாட்டு நாணயங்களை கொண்டு வந்து பயன்படுத்தியதையும் தொல்லாய்வு உணர்த்தியுள்ளது.

சங்க காலத்தில் வணிகத்தில் பண்டமாற்று முறை மட்டுமிருந்தது என்பது தவறான கணிப்பாகும். உள்நாட்டில் பொருட்களைத் தலையில் சுமந்தும், விலங்குகளின் மேலேற்றி கொண்டும், வண்டிகளில் எடுத்து சென்றும் வீட்டு வாயிற்படிக்கும், சந்தைகளுக்கும் கொண்டு சென்று விற்றனர். புகார், மதுரை போன்ற இடங்களில் பெரிய சந்தைகள் இருந்தன. உள்நாட்டு, வெளி நாட்டு வணிகத்தை அன்றைய தமிழகம் கண்டு அறிந்திருந்தது.

## தமிழர்களின் வணிக செல்வாக்கு

சங்க இலக்கிய குறிப்புகளின் அடிப்படையில் கி.மு 6 ஆம் நூற்றாண்டு முதலே உலகின் பல நாடுகளுக்கும் தமிழர்கள் சென்று வணிகம் செய்து வந்தனர் என்பது நாம் அறிந்த ஒன்று. இத்தகைய சிறப்பு வாய்ந்த வணிகத்தில் தமிழகம் ஈடுப்பட்டு பொருள் உற்பத்தியின் மூலமாக பெரும் செல்வத்தை ஈட்டி பேரும் புகழும் அடைந்தது என்பது குறிப்பிடத் தக்க ஒன்று.

## ஏற்றுமதி, இறக்குமதி

“யாதும் ஊரே யாவரும் கேளீர்” என்ற கணியன் பூங்குன்றனாரின் கூற்றுக்கிணங்க நம் நாட்டு வணிகர்கள் பல்வேறு மேலை நாட்டுடன் வணிகத் தொடர்பு கொண்டிருந்தனர். அதாவது எகிப்து, கிரேக்கம், உரோம், பாபிலோனியா முதலிய நாடுகளுடன் வாசனைப் பொருட்கள், விலையுயர்ந்த முத்துக்கள், யானைத் தந்தங்கள் போன்ற பல்வேறுப் பொருட்களையும் ஏற்றுமதி செய்தும் இவர்களுக்கு தேவையான பொருட்களை இறக்குமதி செய்தும் வந்தனர். கி.மு. முதல் நூற்றாண்டு முதல் கி.பி.மூன்றாம் நூற்றாண்டு வரை தமிழகத்தில் ஏற்றுமதியும், இறக்குமதியும் மிகுதியாக இருந்தது என்பது மேல்நாட்டு யாத்ரீகர்கள் எழுதியுள்ள குறிப்புகளில் இருந்து தெரிகிறது.

இத்தகைய ஏற்றுமதி இறக்குமதி மூலமாக தமிழகத் துறைமுகங்களான காவேரி பூம்பட்டினம், கொற்கை, முசிறி போன்றவைச் சிறப்பு பெற்று விளங்கின.

“தத்துநீர் வரைப்பின் கொற்கை” (சிறுபாணாற்றுப்படை–62)

என்ற வரிகள் மூலம் கொற்கை சிறந்த துறைமுக பட்டினமாக விளங்கியதை அறியலாம்.

சீனம் முதலிய நாடுகளிலிருந்து கொண்டுவரப்பட்ட கற்பூரம், பன்னீர், குங்குமம், போன்றவையும், மேற்றிசை நாடுகளாகிய அரேபியா போன்ற நாடுகளிலிருந்து குதிரைகளும் கொண்டு வரப்பட்டன என்பதை,

“நீரின் வந்த நிமிர்பரிப் புரவியும்
காலின் வந்த கருங்கறி மூடையும் (ப.பாலை -185)

என்ற வரிகள் மூலம் தமிழகம் இறக்குமதியிலும் ஈடுப்பட்டிருந்தது என்பதை அறியலாம். புகார் வணிகர் கடல் வணிகத்திலும் சிறந்து விளங்கினர். அரேபியா, ஈழம், கடாரம், சீனம், போன்ற நாடுகளுடன் வணிகம் புரிந்தனர், மரக்கலன்களும் வணிகத்தின் பொருட்டுப் புகார் துறைக்கு வந்தமையை,

“நீரினின்றும் நிலத்து ஏற்றவும்,
நிலத்தினின்று நீர்ப் பரப்பவும்,
அளந்து அறியாப் பல பண்டம்
வரம்பு அறியாமை வந்து ஈண்டி” (ப.பாலை-129-132)

என்ற அடிகள் மூலம் ஏற்றுமதியும், இறக்குமதியும் சிறந்து விளங்கியதை அறியலாம்.

பதிப்புரிமை: ராமச்சந்திர கல்வி மற்றும் விளையாட்டு அறக்கட்டளை பதிப்பகம்

தென்கிழக்காசிய நாடுகளுடனும், மேற்கே யவன நாட்டவரும், மேற்காசியர்களும், உரோமானியர்களும் இந்தியப் பண்டங்களில் பெரிதும் விருப்பம் காட்டினர். யவன வணிகர்களின் வணிக முறைகளை சங்க இலக்கியமான அகநானூற்றில்

"யவனர் தந்த வினைமாண் நல்கலம்
பொன்னோடு வந்து கறியொடு பெயரும்" (அகம் -149)

எனும் வரிகளின் மூலம் யவனர்கள் பொன்னைச் சுமந்து வந்து அதற்கு ஈடாக நம் நாட்டு மருத்துவப் பொருளான மிளகைப் பெறுவதற்காகவே தமிழகத்துடன் வணிகத் தொடர்பு கொண்டிருந்தார்கள் என்பதை அறிய முடிகிறது.

இவ்வாறாக தமிழ்நாட்டில் உள்நாட்டு வணிகமும் அயல்நாட்டு வணிகமும் பெருகி வளர்ந்ததால், பல மொழிகள் பேசுகின்ற மக்களும் காவிரிப் பூம்பட்டினத்தில் தங்கி இருந்தனர் என்பதையும் இந்நூல் எடுத்தியம்புகிறது.

"மொழிபல பெருகிய பழிதீர் தேஎத்துப்
புலம்பெயர் மாக்கள் கலந்தினி துறையும்
முட்டாச் சிறப்பின் பட்டினம் பெறினும்" (ப.பாலை -216-218)

என்ற அடிகள் சான்றாக அமைந்துள்ளது. வணிகம் ஒரு நாட்டின் செல்வ செழிப்பை மட்டும் வளர்க்காமல் மக்களின் நாகரிகத்தையும் சேர்த்த வளர்த்த பெருமையை அடைகிறது.

**குறுந்தொகையில் இடம் பெறும் வணிகம் பற்றிய செய்திகள் :**

சங்கத் தமிழர் அன்றாடத் தேவைகளான அரிசி, பருப்பு, உப்பு, தயிர், மீன், இறைச்சி, முதலான பொருட்களைப் பண்டமாற்று முறையிலே பெற்றுக் கொண்டனர். இடையன் பாலைக் கொடுத்து அதற்கு ஈடாகத் தானியத்தைப் பெற்றுக் கொண்டான் என்பதை

"பாலொடு வந்து கூழொடு பெயரும்
ஆடுடை இடைமகள்" (குறுந்தொகை – 221)

என்று ஆசிரியர் குறிப்பிட்டுள்ளார். இதேப் போன்று உப்பினை நெல்லாக மாற்றியதை,

"…………………………….யாவும்
உப்பை மாறி வெண்ணெல் தரீஇய
உப்புவிளை கழனிச் சென்றனள்" (குறுந்தொகை – 269)

என்ற அடிகளில் சுட்டியுள்ளார்.

**பெரும்பாணாற்றுப்படையில் வணிகம் பற்றிய செய்திகள்**

உள்நாட்டு வணிகம் பற்றிய குறிப்புகள் இந்நூலில் காணப்படுகின்றது. பண்டமாற்றுமுறை பற்றிய குறிப்புகளும் இடம் பெற்றுள்ளது. முல்லை நில மக்கள் தயிர், மோர், இவற்றை குறிஞ்சி நில மக்களிடம் கொடுத்து நெல்லைப் பெற்று வந்தனர். கழுதைகள் மிளகு முதலிய பண்டம் பொதிகளைச் சுமந்து வரிசையாக சென்றன. உப்பு ஏற்றப்பட்ட வண்டிகளை எருதுகள் இழுத்துச் சென்றன. அயல் நாட்டு வாணிபம் குறித்த செய்திகளும் உள்ளன. அவர்கள் பாவை விளக்கு, அன்னப் பறவை விளக்கு ஆகியவற்றைத் தமிழ்நாட்டில் இறக்குமதி செய்தனர். தொண்டை நாட்டுத் துறைமுக நகரங்களுக்கு அயல்நாட்டுகளிலிருந்து குதிரைகள் வந்தன.

"உல்குடைப் பெருவழிக் கவலை காக்கும்" (பெரும்பாணாற்றுப்படை-81)

'உல்கு' – என்றால் சுங்கப்பொருள். இதனால் பண்டைக் காலத்தே ஒரு நாட்டின் பொருள் மற்றொரு நாட்டில் புகும் பொழுது, வழிகளில் மன்னர்கள் சுங்கம் பெற்ற முறையை அறியலாம். இதன் வழியாக நாட்டில் ஏற்றுமதி, இறக்குமதி நடைப்பெற்றன

பதிப்புரிமை: ராமச்சந்திர கல்வி மற்றும் விளையாட்டு அறக்கட்டளை பதிப்பகம்

என்பதை அறிய முடிகிறது. இந்த சுங்க வரியை தற்போதும் கையாண்டு வருகின்றனர்.

**மதுரை காஞ்சியில் வணிகம் பற்றிய செய்திகள்**

தமிழ் இலக்கியத்தில் கூறப்பட்டுள்ள நாளங்காடி, அல்லங்காடி போன்ற பகல் மற்றும் இரவு நேரங்களில் செயல்படும் கடைவீதிகள் இருந்தன “ஓவுக் கண்டன்ன இரு பெரு நியமத்து” (ம.காஞ்சி – 365) எனப்போன்ற செய்திகள் மதுரை காஞ்சியில் இடம் பெற்றிருகின்றன.

“பல்வேறு பண்டமோடு ஊன்மலிந்து கவனி,
மலையவும், நிலத்தவும், நீரவும், பிறவும்,
பல்வேறு திருமணி, முத்தமொடு, பொன்கொண்டு,
சிறந்த தேஎத்துப் பண்ணியம் பகர்நரும்” (ம.காஞ்சி 503-506)

பல்வேறுப் பட்ட பண்டங்களையும், பல உணவுகளையும் நிலத்திடத்தும், நீரிடைத்தும் பிற இடத்தும் கிடைக்கும் பொருள்களையும் பல்வேறுப்பட்ட அழகிய மணிகள் முத்துகள் பொன் ஆகியவற்றை பெற்றுக் கொண்டு விற்பனை செய்தனர்.

“கோடு போழ் கடைஞரும், திருமணி குயினரும்,
சூடுறு நன்பொன் சுடர் இழை புனைநரும்,
………………………………………,
நால்வேறு தெருவினும், கால் உற நிற்றரு” (ம.காஞ்சி 511-521)

நான்கு பெருந்தெருக்களிலும், பொன்னும், மணியும், புடவைகளும், கடுஞ்சரக்கு (கூலம்) போன்ற நால்வகைப்பட்ட வாணிகம் நடைப்பெற்றதால் இப்பகுதியை வணிகர் தெரு என்றும் அழைக்கலாம். இவ்வாறாக வணிகத்திற்கு என்றும் தெருக்கள் இருந்ததையும் இப்பாடல் வழி அறியலாம்.

பட்டினப்பாலையில் வாணிபம் பற்றிய செய்திகள் :

பண்டமாற்றுமுறை தமிழகத்தில் இருந்ததை

“வெள்ளை உப்பின் கொள்ளை சாற்றி
நெல்லொடு வந்த வல்வாய் பஃறி” (ப.பாலை – 29-30)

என்ற வரிகள் உப்புக்கு பதிலாக நெல்லைப் பெற்றனர் என்பதை விளக்குகிறது.

“தமவும் பிறவும் ஒப்பநாடி
கொள்வதூஉம் மிகைகொளாது, கொடுப்பதூஉம்
பல்பண்டம் பகர்ந்து வீசும்
தொல் கொண்டி , துவன்று இருக்கை” (ப.பாலை – 209-212)

தாம் கொள்ளும் பொருள்களைத் தாம் கொடுக்கும் பொருள்களுக்கு மிகுதியாகக் கொள்வதில்லை. தாம் கொடுக்கும் பொருள்களையும், வாங்கும் பொருள்களுக்குக் குறைவாகக் கொடுப்பதில்லை.

வணிகருக்கு உரிய விரதம் என, கொள்வதும் மிகை கொளாது, கொடுப்பதூம் குறை கொடாது பல் பண்டம் பகர்ந்து ஈதல் என நச்சினார்கினியர் குறிப்பிடுகிறார்.(தொல். அகத்திணையியல்28)

தங்களுக்கு வரக்கூடிய இலாபத்தை வெளிப்படையாகக் கூறி வணிகம் செய்வர். இந்நெறியில் அவர்கள் நின்றமையால் வணிகத்தில் சிறந்து செல்வத்தால் மிகுந்து விளங்கினர். வணிகர்களின் வாழ்வு எங்ஙனம் ஏனையோர் வாழ்விற்கு ஆதாரமாய் விளங்குவது என்பதையும் இதன் மூலம் அக்கால தமிழரின் வணிக அறம் சிறப்பு பெற்று விளங்கியதையும் அறிய முடிகிறது.

**கலாச்சார வளர்ச்சி**

பதிப்புரிமை: ராமச்சந்திர கல்வி மற்றும் விளையாட்டு அறக்கட்டளை பதிப்பகம்

தமிழர்களின் வணிகத் தொடர்பின் காரணமாக மேலை மற்றும் கீழை நாடுகளில் நமது நாட்டின் கலாச்சாரம், பண்பாடு, திருமண முறை மற்றும் திருவிழாக்கள் ஆகியவற்றின் பெருமையினை பிறப்பகுதிகளில் நிலை நாட்ட முடிந்தது.

**முடிவுரை**

சங்க காலத்தில் வணிகம் செய்ய மக்கள் அறம் சார்ந்த முறையையே பின்பற்றினார்கள். உள்நாட்டு வணிகத்தை விட அயல் நாட்டு வணிகத்திலே வருவாய் மிகுதியாக கிடைத்தது. நாட்டின் செல்வ செழிப்பிற்கு வணிகம் மிகச்சிறந்த காரணமாக விளங்கிற்று. வசதிகளை பெருக்கி அன்றாட வாழ்க்கை தேவையை பூர்த்தி செய்ய வணிகம் இன்றியமையாதது. ஒரு நாட்டின் முன்னேற்றத்திற்கு முதுகெலுமபாக இருப்பதும் வணிகம் தான் இதுவே சங்க காலமும் வணிகத்தின் சிறப்பம்சமும் என்ற தலைப்பின் வாயிலாக நாம் அறியும் செய்திகளாகும்.

பதிப்புரிமை: ராமச்சந்திர கல்வி மற்றும் விளையாட்டு அறக்கட்டளை பதிப்பகம்